# தமிழ்நாட்டின் உரிமைகளை–சுயமரியாதையை ஓரணியில் நின்று காப்போம்!

# அடுத்து வரும் ஒவ்வொரு மணித்துளியும் தவிர்க்கக்கூடாத பொன் பொழுதுகளென கழகப் பணியாற்றுவோம்!

## நாமக்கல் மாவட்டக் கழக சார்பு அணிகளின் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!




*நாமக்கல்,ஜூலை.13-*

***நாமக்கல் மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டம், நாமக்கல்லில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.***

***அப்போது அவர் ``தமிழ்நாட்டைப் பிரித்தாளத் துடிக்கும் அடிமைகளையும் - பாசிஸ்ட்டுகளையும் 2026 சட்டமன்றத் தேர்தல்களத்தில் வீழ்த்த, தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் திரட்டிடும் கடமை உணர்ந்து செயலாற்ற வேண்டும். அடுத்து வரும் ஒவ்வொரு மணித்துளியும் தவிர்க்கக் கூடாத பொன் பொழுதுகள் (Golden Hour) எனக் கருதி கழகப் பணியாற்று வோம் தமிழ்நாட்டின் உரிமைகளை- சுயமரியாதையை ஓரணியில் நின்று காப்போம்” என்று குறிப்பிட்டார்.***

***கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:***

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து சார்பு அணி நிர்வாகிகளான உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு நாட்களாக தொடர் நிகழ்ச்சிகள். நேற்று காலை முதல் இரவு வரை கரூரில் தொடர்ந்து அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்துவிட்டு, நேற்று நள்ளிரவுதான் நாமக்கல் மாவட்டத்திற்கு வந்தேன். வந்ததில் இருந்தே மிகப்பெரிய எழுச்சி, வரவேற்பு. அதேபோல் இன்று காலையும் மாவட்ட ஆய்வுக் கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் முடித்துவிட்டு, இப்போது இங்கு வந்து இருக்கிறேன்.

### ஆற்றல் மிகுந்த மக்கள்

நாமக்கல் என்று சொன்னாலே எல்லாருக்கும் தெரியும். தொழில் வளர்ச்சியிலும், கல்வியிலும் சிறந்த மாவட்டம் என்றால் அது நாமக்கல் மாவட்டம்தான். அந்த அளவிற்கு ஆற்றல் மிகுந்த மக்களைக் கொண்டது, இந்த நாமக்கல் மாவட்டம், அப்படிப்பட்ட இந்த ஊரில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ராஜேஷ்குமார் அவர்களுக்கும், அண்ணன் மூர்த்தி அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க மகிழ்ச்சி

நம் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், சார்பு அணிகளுக்கு என்று எப்போதுமே தனி இடம் உண்டு. தலைவர் மனதிலும் தனி இடம் உண்டு. அதனால்தான், எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் தலைவர் அவர்கள் அங்கு இருக்கின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு நடத்துவார். நானே சென்று கேட்டேன், ``என்ன நீங்கள் மாவட்டக் கழக நிர்வாகிகளை மட்டும் சந்திக்கிறீர்கள். சார்பு அணி என்றால், உங்களுக்கு என்ன சும்மாவா?” என்று கேட்டேன். உடனே தலைவர் அவர்கள், ``நான் மாவட்டக் கழக நிர்வாகிகளை சந்திக்கிறேன், சார்பு அணிகளை நீ சென்று சந்தித்துப் பேசு” என்று சொன்னார்கள். நானும் சார்பு அணியில், ஒரு அணியின் செயலாளர்தான். அந்த விதத்தில், இன்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

பல்வேறு மாவட்டங்கள். விழுப்புரம், தூத்துக்குடி, திருவாரூர், நாகப்பட்டினம், கோயம்புத்தூர், வேலூர், சிவகங்கை, புதுக்கோட்டை என பல மாவட்டங்கள். எங்கு சென்றாலும் சார்பு அணிகளை சந்தித்து, அவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

### சார்பு அணிகள்

சார்பு அணி என்றால், கழகத்தைச் சார்ந்து இருக்கின்ற அணி என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. கழகம்தான் உங்களைச் சார்ந்து இருக்கிறது என்ற சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். 23 அணிகள் இருந்தன. நம் தலைவர் அவர்கள் அதை அதிகப்படுத்தி இப்போது 25 அணிகளாக சென்ற பொதுக்குழுவில் அறிவித்தார் என்பது உங்களுக்குத் தெரியும்.

இந்தியாவிலேயே எனக்குத் தெரிந்து, மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு தனி அணி என்பது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் உண்டு. கல்வியாளர்கள் என்ற இரண்டு அணிகளும் இப்போது புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. நீங்கள் வெறும் சார்பு அணிகள் மட்டுமல்ல, நீங்கள் நினைத்தால் சாதனை படைக்கக்கூடிய அணி என்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஆங்கிலத்தில் அணிகளை `விங்ஸ்’ என்று சொல்வார்கள். `விங்ஸ்’ என்றால் சிறகுகள் என்று அர்த்தம். கழகம் இன்றைக்கு வெற்றியைப் பெற்று உயர, உயர பறந்துகொண்டு இருக்கிறது என்றால், அதன் சிறகுகளாகிய நீங்கள்தான், உங்களின் உழைப்புதான் காரணம். சார்பு அணிதானே நமக்கு என்ன முக்கியத்துவம் கொடுத்துவிடப் போகிறார்கள் என்ற எண்ணம் நிச்சயம் உங்களுக்கு வந்துவிடக்கூடாது.

நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் நிச்சயம் வழங்குவார் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, நகரச் செயலாளர்களாக பலர் சார்பு அணியில் இருந்து கழகத்திற்காக உழைத்து பொறுப்புக்கு வந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், நம் கழகத்தின் பொதுச் செயலாளரைக் கொடுத்தது கழகத்தின் மாணவர் அணி. நம் கழகத்தின் தலைவரைக் கொடுத்தது கழகத்தின் இளைஞர் அணி. தமிழ்நாட்டின் முதலமைச்சரைக் கொடுத்தது நம் இளைஞர் அணி.

### கழகத்தின் வரலாறு

இந்த மேடையில் இருக்கின்ற நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ராஜேஷ்குமார் அவர்கள் இளைஞர் அணியிலிருந்து சிறப்பாக செயல்பட்டு இன்றைக்கு மாவட்டச் செயலாளராக பொறுப்புக்கு வந்து இருக்கிறார். நம் மாண்புமிகு அமைச்சர் மதிவேந்தன் அவர்கள் இளைஞர் அணியில் துணை அமைப்பாளராக சிறப்பாகப் பணியாற்றியவர். நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் டெல்லி சென்று இருக்கிறார். இந்தப் பகுதியில் மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்ட சகோதரர் ஆனந்தகுமார் அவர்கள் இன்றைக்கு தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப்படி, கழகத்தின் ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது.

மாணவர் அணியை எடுத்துக்கொண்டால், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம். நம் கழகத்தின் மாணவர் அணி இல்லாமல் தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்புப் போராட்டமே கிடையாது. தி.மு.க-வின் இளைஞர் அணிக்கு இன்னும் பல சிறப்புகள் உண்டு. இந்தியாவிலேயே முதன்முதலில் ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணியைத் தொடங்கிய இயக்கம், நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதை தொடங்கியது நம் தலைவர் அவர்கள்.

சட்டத்துறையை எடுத்துக்கொண்டால் பல வரலாற்றுச் சிறப்புமிக்க சட்ட போராட்டங்களை நடத்தி, அதில் வெற்றிப்பெற்றது தான் நம் கழகத்தின் சட்டத்துறை. இப்படி நம் அணிகளின் பெருமையைச் சொல்லிக் கொண்டே போகலாம். அணிகளில் நம் பணிகளைச் செய்துகொண்டு இருப்பது, தாய் கழகத்தில் வேலை செய்வதற்கான ஒரு பயிற்சிக்களம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

### அரசின் சாதனைகள்

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் தனிப்பட்ட செல்வாக்கில் கட்டுப்பாட்டில் 200 வாக்குகளை வைத்து இருந்தீர்கள் என்றால் உங்களை யாராலும் தவிர்க்க முடியாது. அதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நம்மிடம் சரியான கொள்கை இருக்கிறது. நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகள் இருக்கின்றன. நம் தலைவரின் சாதனைகளை, மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டிய கடமை, நம் அத்தனை பேருக்கும் இருக்கிறது. ஒரு சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆட்சிக்கு வந்ததும் நம் தலைவர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்த 4 வருடத்தில், 730 கோடி முறை இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலம் பயணம் செய்துள்ளார்கள். அதுதான் அந்த திட்டத்தின் வெற்றி. இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 15 கோடியே 50 லட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன். அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க செல்லும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை உங்கள் வங்கி கணக்கில் வைக்கப்படுகிறது. இதன் மூலம் 8 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் இந்த வருடத்தில் மட்டும் 40 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அடுத்து இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம். நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். வேலைக்கு செல்லும் பெற்றோர்கள் குழந்தைகளை வாழ்த்தி, பள்ளிக்கு அனுப்புகிறாக்ள். என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இருக்கிறது. தரமான உணவு கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் தமிழ்நாடு முழுவதும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 40 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

### 2 லட்சத்து 50 ஆயிரம் மகளிர்

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த திட்டம். இதைச் செயல்படுத்த முடியாது என்று எதிர்கட்சிகளெல்லாம் சொன்ன திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். கடந்த 22 மாதங்களாக கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார் தலைவர் அவர்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 50 ஆயிரம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தில் தலைவர் அவர்கள் விதிகளையெல்லாம் தளர்த்தி மீண்டும் 15-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் முகாம்கள் நடக்க இருக்கின்றன. இந்தத் திட்டத்தின் பயனாளிகள் மக்கள்தான். ஆனால், மக்கள் எளிதில் மறந்துவிடுவார்கள். நாம்தான் அவர்களிடம் இதைத் தொடர்ந்து ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இதை மக்களிடம் பிரச்சாரம் செய்யுங்கள்.

அதிக செலவு செய்யத் தேவையில்லை. தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள், திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். ஒரு மைக், ஒரு ஸ்பீக்கர் வைத்து நம் சாதனைகளை மக்களிடம் கொண்டுபோய் சேருங்கள். நம் சாதனைகளை துண்டறிக்கைகளாக அச்சடித்து மக்களிடம் கொடுங்கள். களத்திற்கு இணையாக, சமூக வலைதளமும் இப்போது மிகமிக முக்கியமான களமாகிவிட்டது. அதிலும் நீங்கள் துடிப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமூக வலைதளம்தான் இன்றைக்கான அரசியலை நிர்ணயிக்கிறது.

உங்கள் பகுதியில் இருப்பவர்களிடம் பேசி, நெருங்கிப் பழகுங்கள். அவர்களின் கோரிக்கையைக் கேளுங்கள். அந்தக் கோரிக்கைகளைச் செய்து முடிக்கிறீர்களோ? இல்லையோ அதை காது கொடுத்துக் கேளுங்கள். உங்களால் முடிந்தால் அந்தப் பிரச்சிகையைத் தீர்த்துக் கொடுங்கள். இல்லையென்றால், உங்களின் வட்டச் செயலாளரிடமோ, பகுதிச் செயலாளரிடமோ, மாவட்டச் செயலாளரிடமோ, இல்லை, அணியின் நிர்வாகிகளிடமோ சொல்லி அந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க முயற்சி செய்யுங்கள்.

### கழகப்பணி– தேர்தல் பணி

உங்களுக்குள் சின்னச் சின்ன பிரச்சினைகள் இருக்கலாம். அடுத்த 8 மாதம் அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தவிர்த்துவிட்டு, நம் அனைவரின் ஒரே குறிக்கோள், ஒரே இலக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர வேண்டும். நம் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமர வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு தேர்தல் பணி மற்றும் கழகப் பணிகளை நீங்கள் செய்யுங்கள்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சரியாக 8 மாதங்கள்தான் இருக்கின்றன. அடுத்து வருகின்ற ஒவ்வொரு மணித்துளியும், ஒவ்வொரு மணி நேரமும் `கோல்டன் அவர்’ என்பதை நீங்கள் உணர வேண்டும். கழகத்திற்கு ஆதரவாக இருக்கின்ற வாக்காளர்களை நீங்கள் தக்கவைக்க வேண்டும். புதிய வாக்காளர்களை, கழக ஆதரவாளர்களாக நீங்கள் மாற்ற வேண்டும்.

கழகத் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். `ஓரணியில் தமிழ்நாடு’ மூலமாக ஒரு முன்னெடுப்பை எடுத்துள்ளார். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் இருக்கின்ற 30 சதவிகித வாக்காளர்களை நம் கழகத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். நேற்று இரவு வரைக்கும் உங்களின் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த, இராசிபுரம் தொகுதி மூன்றாது இடத்தில் இருந்தது. அதற்கு எனது வாழ்த்துகள். இன்று காலை 11-வது இடத்திற்கு வந்து இருக்கிறது. அதை விரைவில் 3-வது இடத்திற்கோ, இல்லை முதல் இடத்திற்கோ நிச்சயம் கொண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இங்கு இருக்கின்ற 6 தொகுதிகளும் `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் நிச்சயம் வெற்றியைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் மக்களுக்கு பல திட்டங்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். இன்றைக்கு அ.தி.மு.க-வும், பா.ஜ.க-வும் எதிர்புறம் ஒன்று சேர்ந்து வருகிறார்கள். எனவே, நமது வேலை சுலபம் என்று சாதாரணமாக இருந்துவிடக் கூடாது. நாம் செய்கின்ற பணியைச் செய்துகொண்டு, சரியாக முடித்துக்காட்ட வேண்டும்.

இன்றைக்கு நம் சாதனைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், இந்த அரசிற்கு எப்படியாவது இடையூறு கொடுக்க வேண்டும் என்று ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு என்னென்ன பிரச்சினைகளைக் கொண்டு வருகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

புதிய கல்விக்கொள்கைத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். அதன் மூலம் இந்தியை எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் திணிக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். நல்ல வேளை, இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், நம் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருக்கிறார். எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் இருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதை யோசித்து பாருங்கள். நம்மில் பாதிபேர் இந்தியில் பேசிக்கொண்டு இருந்திருப்போம். அந்த நிலைமையை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் உருவாக்கி இருப்பார். அவர் நீங்கள் வரவேண்டாம், நானே டெல்லிக்கு வந்து எங்கெல்லாம் கை காட்டுகிறீர்களோ அங்கெல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லியிருப்பார்.

நம் தலைவர் அவர்கள் துணிச்சலாகச் சொன்னார். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயைத் தருவோம் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் வெளிப்படையாகச் சொன்னார்.

### திணிக்கப் பார்க்கிறார்கள்

உங்களின் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை நீங்கள் தருவீர்கள் என்றால், அந்த 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் எனக்குத் தேவையில்லை. நீங்கள் 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும், உங்களின் புதிய கல்விக் கொள்கையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏன் குறுக்கு வழியில், இந்தியை தமிழ்நாட்டில் திணிக்கப் பார்க்கிறாய் என்று வெளிப்படையாகச் சொன்ன ஒரே முதலமைச்சர், நம் முதலமைச்சர் என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்தியையும், சமஸ்கிருதத்தையும் சேர்த்துத் திணிக்கப் பார்க்கிறார்கள்.

தொகுதி மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள். மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளைக் குறைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இப்போது 39 தொகுதிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. தொகுதி மறுவரையறை மட்டும் வந்தால், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, குறைக்கப்பட்டு 31 தொகுதிகளாகிவிடும். இதில் 7-லிருந்து 8 தொகுதிகளை நாம் இழக்க நேரிடும். இப்படி ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு எப்படி எல்லாம் இடையூறுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிக்கோளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவற்றையெல்லாம் தடுத்த நிறுத்தி, தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்றால் மீண்டும் நம் ஆட்சி வந்தாக வேண்டும். அதற்கு 25 அணிகளில் இருக்கும் நீங்கள் களத்தில் இறங்கி, அடுத்த 8 மாதங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

`ஓரணியில் தமிழ்நாடு’ என்ற இலக்கை வைத்து, களத்தில் இறங்கி வாக்காளர்களை சந்தித்து, திட்டம் போட்டு செய்தீர்கள் என்றால், நிச்சயம் அந்த இலக்கை உங்களால் அடைய முடியும். 30 சதவிகிதம் இலக்கைக் கொடுத்திருக்கிறார் நம் தலைவர் அவர்கள். நாமக்கல் மாவட்டம் நிச்சயமாக 50 சதவிகிதமாகவாவது இலக்கை அடைவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஒவ்வொரு அணியாக நாம் பிரிந்து இருக்கிறோம். இளைஞர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி என நாம் அனைவரும் பிரிந்திருக்கிறோம். தேர்தல் வருகின்ற வரைக்கும் நாம் அனைவரும் ஒரே அணி தான். அது கலைஞர் வழியில் வந்திருக்கின்ற நம் தலைவர் அணி என்பதை மட்டும் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

### பிரதிபலன் உண்டு

நீங்களெல்லாம் மனதில் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. நாங்களெல்லாம் சிறப்பாக செயல்படுகிறோம், எங்களுக்கு என்ன பிரதிபலன் என்று கேட்கிறீர்கள். நிச்சயம் இளைஞர் அணி தம்பிமார்களுக்கு என்ன வாக்குறுதி கொடுப்பேனோ, என்னால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கு எப்படி உதவுகிறேனோ, அதே மாதிரி சார்பு அணிகளுக்கான முக்கியத்துவத்தை நிச்சயம் தலைவரிடம் சொல்லி, நீங்கள் சிறப்பாக செயல்பட்டீர்கள் என்றால் உங்களுக்கான பிரதிபலன் நிச்சயமாக வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலேயே கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நான் எடுப்பேன் என்று கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த மாவட்டக் கழகச் செயலாளருக்கும், மாவட்டப் பொறுப்பாளர் ராஜேஷ்குமார் அவர்களுக்கும், அண்ணன் மூர்த்தி அவர்களுக்கும், வந்திருக்கின்ற அனைத்து அணிகளின் நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி தம்பிமார்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உற்சாக உரை நிகழ்த்தினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ராஜேந்திரன், மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜேஷ்குமார், மேற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினரும், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளருமான பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், பொன்னுசாமி, மாநகர மேயர் கலாநிதி, மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் சீனிவாசன், ஆனந்தகுமார் உள்பட கழக சார்பு அணியினர் பலரும் கலந்து கொண்டனர்.